
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, SEPTEMBER 11 2025

வியாழக்கிழமை 11, செப்டெம்பர் 2025 | ஒளி: 11 கதிர் 047 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



# நேபாளத்துக்கான சேவைகள் இரத்து

டி.கே.ஜி.கபில

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கும் நேபாளத்தின் காத்மண்டுவிற்கும் இடையிலான விமான சேவைகள் புதன்கிழமை (10) காலை முதல் நிறுத்தப்பட்டுள்ளது என ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் தகவல் தொடர்புத் தலைவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கு ஆப்பு: 150 ஆதரவு



## சாமர எதிர்ப்பு: அர்ச்சுனா ஆதரவு

முன்னாள் ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலம் 150 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டமூலத்திற்கு எதிர்கட்சிப்பக்கத்திலிருந்து எதிராக சாமர சம்பத் தசநாயக்கவும் ஆதரவாக அர்ச்சுனா இராமநாதனும் மட்டுமே வாக்களித்தனர்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (10) அன்று ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலம் மீதான விவாதம் காலை 11 மணிமுதல் மாலை 3.30 மணிவரை இடம்பெற்றது. இதனையடுத்து சட்டமூலத்தை நிறைவேற்ற சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க வாக்கெடுப்பைக்கோரினார். இதனையடுத்து, வாக்கெடுப்புக்கான "கோரம்" ஒலித்த நிலையில் எதிர்க்கட்சி எம்.பிக்கள் சபையிலிருந்து வெளியேறி சென்றனர். ஆனால் எதிர்க்கட்சியின் புதிய ஜனநாயக முன்னணி எம்.பியான சாமர சம்பத் தசநாயக்கவும் யாழ். மாவட்ட எம்.பியான அர்ச்சுனா இராமநாதனும் சபையில் அமர்ந்திருந்தனர்.

தொடர்ச்சி P2

# "எதனையோ மறைக்க அரசாங்கம் முற்படுகிறது"



பிரதி பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவந்தால், அதனைத் தோற்கடிக்க அரசாங்கத்திடம் பெரும்பான்மை இருந்தும், பிரேரணையை நிராகரித்ததன் மூலம் அரசாங்கம் இதில் எதனையோ மறைக்க முற்படுகிறது. இதனை நிராகரிப்பதற்குச் சபாநாயகருக்கும் பாரிய அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றம்சாட்டியது.

தொடர்ச்சி P2

## எல்ல கோரம்:

# தனியார் பஸ்ஸின் உரிமையாளருக்கு பிணை



எல்லா-வெல்லவாய பிரதான வீதியில், 12ஆவது மைல்கல் பகுதியில், வியாழக்கிழமை (04) இரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற கோர விபத்தில், 15 பேரின் உயிரைப் பறித்த 18 பேரை கடும் காயங்களுக்கு உள்ளாக்கிய விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸின் உரிமையாளரை எல்ல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## "முஸ்லிம்களின் புதைகுழி

# அக்டோபரில் அகழ்வுப்பணி"





மட்டக்களப்பு மாவட்டத்தின் குருக்கள் மடம் கிராமத்தில் படுகொலை செய்யப்பட்ட முஸ்லிம் மக்களின் புதைகுழி அகழ்வுப்பணி எதிர்வரும் அக்டோபர் மாதத்தில் ஆரம்பமாகும். தேவைப்பட்டால் சர்வதேசத்தின் உதவி ஒத்துழைப்புகளையும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (10) அன்று நிலையியற் கட்டளை 27/ 2 இன் கீழ் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியான எம். எல். ஏ.எம்.ஹிஸ்புல்லா எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஹிஸ்புல்லா எம்.பி. தமது கேள்வியின் போது, 1990ஆம் ஆண்டு ஜூலை 12ஆம் திகதி களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் குருக்கள் மடம் கிராமத்தில் மக்கா சென்று திரும்பிய முஸ்லிம் மக்களை விடுதலைப் புலிகள் கடத்திச் சென்று படுகொலை செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# "பொதுமக்களின் காணிகளை மக்களிடம் ஒப்படைக்கப்படும்"



இடம்பெயர்ந்தவர்களை அவர்களின் சொந்தக் காணிகளிலேயே மீள் குடியேற்ற வேண்டும் என்ற கொள்கைகளுடனேயே அரசாங்கம் செயற்படுகின்றது என்றும், இதன்படி யாழ். மாவட்டத்தில் விடுவிக்கப்படாமல் இருக்கும் பொதுமக்களின் காணிகளை முறையாக மக்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# பறக்கும் வான விளக்குகளை பறக்கவிடுவோருக்கு எச்சரிக்கை

நாடளாவிய ரீதியில் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் சிறப்பு விழாக்களின் போது, பறக்க விடப்படும் வான விளக்குகளால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் குறித்து பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# மனம்பேரியின் கார் சிக்கியது

முழுச் செய்தி P2

## பிரதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை

# "கொண்டு வர முடியாது"



உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் பாதுகாப்பு பிரதியமைச்சர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் சமர்ப்பித்த நம்பிக்கையில்லா பிரேரணை ஒழுங்கற்றது என அறிவித்த சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன அதனை ஏற்க முடியாதெனக் கூறி நிராகரித்தார்.

தொடர்ச்சி P2

# "கொண்டு வர முடியும்"



பிரதி அமைச்சர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர முடியும். இது வெஸ்ட்மின்ஸ்டர் சம்பிரதாயம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (10) அன்று உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் பாதுகாப்பு பிரதியமைச்சர்

தொடர்ச்சி P2



# பலரின் உயிர்களை காப்பாற்ற போராடிய பிரித்தானிய பெண்

எல்ல-வெல்லவாய வீதியில் கடந்த 5ஆம் திகதி இடம்பெற்ற பேருந்து விபத்தின் போது தைரியமாக செயல்பட்டுக் காயமடைந்த பயணிகளுக்கு உடனடி உதவிகளை வழங்கியதற்காக, பிரித்தானிய பெண் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

பிரித்தானியப் பிரஜையான எமி விக்டோரியா கிப் என்பவர் பாராளுமன்றத்தில் சிறப்பு அங்கீகாரத்துடன் கௌரவிக்கப்பட்டார்.

இந்த அங்கீகாரம் சுற்றுலா அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது. சம்பவத்தின் போது அவசர சேவைகள் வரும் வரை பயணிகளுக்கு மருத்துவ உதவி மற்றும் ஆறுதல் வழங்கிய அவரது சேவையைப் பாராட்டும் வகையில் இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. விபத்தின் போது உடனடியாக செயற்பட்ட அவரது செயல்கள், பேருந்தில் இருந்தவர்களின் உயிர்களைக் காப்பாற்றுவதில் முக்கிய பங்காற்றின என அதிகாரிகள் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

# "சித்திரவதை கூடங்களாகவே ஸ்ரீலங்காவை மாற்றியுள்ளனர்"



சிங்கப்பூராக மாற்றுவதாக கூறிக்கொண்டு சித்திரவதை கூடங்களாகவே மாற்றியுள்ளனர் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (11) அன்று நடைபெற்ற, முன்னாள் ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் நீக்குதல் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஜே.ஆர் ஜயவர்தன கொண்டு வந்ததுடன் அவருடன் இதுவரையில் 8 ஜனாதிபதிகள் நாட்டை ஆட்சி செய்துள்ளனர். ஜனநாயக ஆட்சி முறைக்குள் சர்வாதிகாரத்தை புகுத்திய ஆட்சி முறையாகவே இதனை நாங்கள் பார்க்கின்றோம்.

தொடர்ச்சி P2



# 30 ஆண்டு கால ஊழலை விசாரி;

## நேபாள அரசமைப்பை திருத்து

### ஜென் z போராட்டக்காரர்கள் நிபந்தனை

நேபாளத்தில் இளம் தலைமுறையினரின் ஊழல் எதிர்ப்பு போராட்டம் தீவிரமடைந்ததன் காரணமாக அந்நாட்டுப் பிரதமர் சர்மா ஒலி பதவியை ராஜினாமா செய்துள்ளார். இந்நிலையில், நேபாள ஜனாதிபதி ராம் சந்திர பவுடேல், ஜென் z போராட்டக்காரர்களைச் சந்தித்து ஆலோசிக்கவுள்ளார். அமைதிப் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது குறித்து போராட்டக்காரர்களிடம் அவர் வலியுறுத்துவார் என்று தெரிகிறது.

இந்த நிலையில், நேபாளத்தில் அமைதி திரும்பப் போராட்டக்காரர்கள் சில நிபந்தனைகளை முன்வைத்துள்ளனர். அவை பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

முக்கிய நிபந்தனைகள் என்னென்ன? பொதுமக்களின் நம்பிக்கையை இழந்துவிட்ட பாராளுமன்ற பிரதிநிதிகள் சபையை உடனடியாகக் கலைக்க வேண்டும்.

குடிமக்கள், நிபுணர்கள், இளைஞர்கள் பிரதிநிதித்துவத்தோடு நேபாள அரசமைப்பை முழுவதுமாக திருத்தி எழுத வேண்டும்.

நியாயமான நேர்மையான முறையில் விரைவில் தேர்தல் நடத்திட வேண்டும்.

கடந்த 30 ஆண்டுகளாக நடந்த ஊழல் குறித்தும், அரசுடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பாகவும் தீவிர விசாரணை நடத்த வேண்டும். சட்டவிரோத சொத்துகள் தேசிய உடைமையாக்கப்பட வேண்டும்.

கல்வி, சுகாதாரம், நீதித்துறை, பாதுகாப்பு, தொலைதொடர்பு துறைகளில் சீர்திருத்தம் தேவை. ஆகிய கோரிக்கைகளைப் போராட்டக்காரர்கள் முன்வைத்துள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கு ஆப்பு: 150 ஆதரவு

இந்நிலையில், இலத்திரனியல் முறையில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் சட்டமூலத்திற்கு ஆதரவாக 151 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் அளிக்கப்பட்டது.

இதில், ஆதரவாக யாழ். மாவட்ட எம்.பியான அர்ச்சுனா இராமநாதன் வாக்களித்த நிலையில், எதிர்க்கட்சியில் ஒன்றான புதிய ஜனநாயக முன்னணி எம்.பியான சாமர சம்பத் தசநாயக்க எதிராக வாக்களித்தார். இதனடிப்படையில், சட்டமூலம் 150 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்துச் செய்தற்கான சட்டமூலம் கடந்த ஜூலை மாதம் 31ஆம் திகதியன்று வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டது. நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் பணிப்புக்கமைய இந்த வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டது. 1986ஆம் ஆண்டு 04ஆம் இலக்க ஜனாதிபதிகளின் உரித்து சட்டத்தை இரத்துச் செய்யும் பொருட்டு இச்சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. 1986ஆம் ஆண்டு 4ஆம் இலக்க ஜனாதிபதிகளின் உரித்து சட்டம் இந்த சட்டமூலத்தின் ஊடாக இரத்துச் செய்யப்படும்.

இரத்துச் செய்யப்படும் சட்டத்தின் 2ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் முன்னாள் ஜனாதிபதிகள் அல்லது முன்னாள் ஜனாதிபதிகளின் விதவையான மனைவியருக்கு வழங்கப்படும் ஏதேனும் வீடு அல்லது செலுத்தப்படும் மாதாந்த கொடுப்பனவு, இரத்துச் செய்யப்படும் சட்டத்தின் 3ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் முன்னாள் ஜனாதிபதிகள் அல்லது முன்னாள் ஜனாதிபதிகளின் விதவையான மனைவியருக்கு செலுத்தப்படும் செயலாளருக்கான மாதாந்த கொடுப்பனவு மற்றும் உத்தியோகபூர்வ வாகனங்கள் மற்றும் வேறு சகல வசதிகள் இரத்துச் செய்யப்படும் சட்டத்தின் 4ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய முன்னாள் ஜனாதிபதிகள் அல்லது முன்னாள் ஜனாதிபதிகளின் விதவையான மனைவியருக்கு செலுத்தப்படும் மாதாந்த கொடுப்பனவு என்பன நிறுத்தப்படும்.

## நேபாளத்துக்கான...

அதன்படி, புதன்கிழமை (10) காலை 08.35 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து நேபாளத்தின் காத்மண்டுவிற்குப் புறப்படவிருந்த ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானம் UL-181 இரத்து செய்யப்பட்டுள்ளது.

நேபாளத்தில் நிலவும் அமைதியின்மை காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேபாள சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம் அந் நாட்டில் உள்ள அனைத்து உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான நிலையங்களையும் மூட நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் 1979 என்ற எண் மூலம் தொடர்பு கொள்ளுமாறு தீபால் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார்.

## “எதனையோ மறைக்க...

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் புதன்கிழமை (11) அன்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ஐக்கிய மக்கள் சக்தி இவ்வாறு குற்றம்சாட்டியது. இந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக்க எம்.பி., அஜித் பெரேரா எம்.பி., நிஸாம் காரியப்பர் எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் அஜித் பெரேரா எம்.பி. கூறுகையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற காலப்பகுதியில் கிழக்கு மாகாண இராணுவ கட்டளைத்தளபதியாக செயற்பட்ட அனுர ஜயசேகர, தற்போது அரசாங்கத்தின் பாதுகாப்பு பிரதி அமைச்சராக உள்ளார். அவர் இந்த பதவியில் இருக்கும் நிலையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் நேர்மையாக இடம்பெறாது. அதனால் அவரை பிரதி அமைச்சுப் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என நாங்கள் அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டிருந்தோம். ஆனால், அரசாங்கம் அதனைச் செய்யத் தவறியதால், பிரதி பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரத் தீர்மானித்தோம் என்றார்.

## தனியார் பஸ்ஸின்...

பஸ்ஸை சரியான நிலையில் பராமரிப்பதில் அலட்சியம் காட்டிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர், இது உயிரிழப்புக்கு காரணமாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. மேலும் விசாரணைகள் நடந்து வருகின்றன.

கைது செய்யப்பட்ட பேருந்தின் உரிமையாளர் தங்காலை பகுதியைச் சேர்ந்தவர் என்பதுடன், சந்தேக நபர், பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் புதன்கிழமை (10) ஆஜர்படுத்தப்பட்டார். அவருக்கு நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது. பண்டாரவளை நீதவான் கெமுனு சந்திரசேகர, அவரை 200,000 ரூபாய் சொந்தப் பிணையிலும் 50,000 ரூபாய் ரொக்கப் பிணையிலும் விடுவிக்க உத்தரவிட்டார். தங்காலை நகர சபை ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களை ஏற்றிச் சென்ற குறித்த தனியார் சுற்றுலாப் பேருந்து, நுவரெலியாவிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த போது, ஒரு சொகுசு காரில் மோதி பள்ளத்தில் 1000 அடி பள்ளத்தில் விழுந்தமை குறிப்பிடத்தக்கது.

பஸ் விபத்துக்கு உள்ளானபோது, பஸ்ஸில், 34 பேர் இருந்தனர். அதில், 15 பேர் உயிரிழந்திருந்தனர். மேலும், 18 பேர் காயமடைந்தனர். ஒரு பயணி காணாமல் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பறக்கும் வான...

பாதுகாப்பு குறித்து நடைபெற்ற கலந்துரையாடலின் போது, இந்த வான விளக்குகளால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது என பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இந்த வான விளக்குகள் தரையில் விழுந்து தீப்பிடிக்கும் அபாயம் உள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

வான விளக்குகள் பட்டாசு தொழிற்சாலைகள், பெட்ரோல் நிலையங்கள், எரிபொருள் சேமிப்பு பகுதிகள், வீடுகள், கட்டிடங்கள் போன்றவற்றின் மீது விழுந்தால் உயிர் இழப்பு ஏற்படும் அபாயம் இருப்பதாக பொலிஸ் ஊடகப்பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது..

இதனால் பொதுமக்கள் இதில் சிறப்புக் கவனம் செலுத்தி இதுபோன்ற செயல்களில் கவனமாக இருக்குமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## “சித்திரவதை கூடங்களாகவே...

சிங்கப்பூராக மாற்றுவதாக கூறிக்கொண்டு சித்திரவதை கூடங்களாகவே மாற்றியுள்ளனர் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை(11) அன்று நடைபெற்ற, முன்னாள் ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் நீக்குதல் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஜே.ஆர் ஜயவர்தன கொண்டு வந்ததுடன் அவருடன் இதுவரையில் 8 ஜனாதிபதிகள் நாட்டை ஆட்சி செய்துள்ளனர். ஜனநாயக ஆட்சி முறைக்குள் சர்வாதிகாரத்தை புகுத்திய ஆட்சி முறையாகவே இதனை நாங்கள் பார்க்கின்றோம். இந்த ஆட்சி முறையானது எங்களுக்கு என்ன நன்மை செய்தது.

இந்நிலையில் எங்களைப் பொறுத்தவரையில், உரித்துரிமைகளை இல்லாமல் செய்வதையும் விட ஜனாதிபதி ஆட்சி முறை இருக்கக்கூடாது என்பதே எங்களின் நிலைப்பாடாகும். இதேவேளை, இப்போது மண்ணை தோண்டும்போது, எலும்புக்கூடுகளைக் காண்கின்றோம். 230க்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதியாக சந்திரிகா இருந்த போது இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. வடக்கில் மாத்திரமன்றி, கிழக்கிலும் இந்த நிலைமை இருந்தது.

இந்நிலையில், இப்போது மனித புதைகுழிகள் மட்டுமன்றி போதைப் பொருட்களும் குழிகளிலிருந்து மீட்கப்படுகின்றன. இதற்கெல்லாம் ஜனாதிபதி ஆட்சி முறையே காரணமாக இருந்துள்ளது என்றார்.

# “முஸ்லிம்களின் புதைகுழி அக்டோபரில் அகழ்வுப்பணி”

அது தொடர்பில் களுவாஞ்சிக்குடி பொலிஸி முறைப்பாடு செய்யப்பட்டதுடன் அதனையடுத்து நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதன் போது சர்வதேச நியதிகளுக்கு அமைய அதனை அகழ்வு செய்து விசாரணை நடத்துவதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது அதற்கமைய அது தொடர்பிலான நடவடிக்கைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் எனக்கேட்டார்.

இதற்கு பதிலளித்த நீதி யமைச்சர்,

மேற்படி சம்பவம் தொடர்பில் அரசாங்கம் முழுமையான கவனத்தை செலுத்தியுள்ளது. அந்த வகையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

தேவைப்பட்டால் சர்வதேசத்தின் உதவிகளையும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். நீதி அமைச்சிடம் போதிய நிதி உள்ளதால் அது தொடர்பான நடவடிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட நிபுணர்களின் மதிப்பீட்டுக்கு இணங்க நிதியை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டில் நடைமுறையிலுள்ள சட்ட நடைமுறைகளுக்கு இணங்க வெளிப்படைத்தன்மையுடன் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதற்கான நடவடிக்கைகளில் இழப்பீட்டு அலுவலகம் மற்றும் காணாமற் போனோர் அலுவலகம் காத்திரமான செயற்பாடுகளை மேற்கொள்ளும். அதற்காக தேவைப்படும் அனைத்தையும் பெற்றுக் கொடுப்பதில் அரசாங்கம் அரசாங்கம் ஒரு போதும் பின்னிற்காது என்றார்.

## “கொண்டு வர முடியாது”

இதனையடுத்து, சபையில் சர்ச்சை ஏற்பட்டதுடன், சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுமெனப் பிரதான எதிர்க்கட்சி எச்சரித்தது.

பாராளுமன்றம் புதன்கிழமை (10) இடம்பெற்ற சபாநாயகர் அறிவிப்பில், 2025.08.12ஆம் திதியன்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) அருணா ஜெயசேகரவுக்கு எதிராக,எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எதிர்க்கட்சியைச் சேர்ந்த 32 பாராளுமன்ற உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ‘நம்பிக்கையில்லாத் பிரேரணை தொடர்பாக, 2025.08.19ஆம் திகதியன்று சபைக்கு வெளியிட்ட அறிவிப்பின் தொடர்ச்சியாக இந்த அறிவிப்பை விடுக்கிறேன். அரசியலமைப்பின் விதிகள் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் மற்றும் பாராளுமன்ற நடைமுறைகள் மற்றும் முன்னுதாரணங்களின் அடிப்படையில், இந்தப் பிரேரணையை நான் கவனமாகப் பரிசீலித்துள்ளேன். இந்தியாவின் மக்களவை மற்றும் அவுஸ் திரேலியாவின் பிரதிநிதிகள் சபை போன்ற பிற கொமன்வெல்த் மற்றும் ஜனநாயக சட்டங்களில் இது தொடர்பாகப் பின்பற்றப்படும் மரபுகள் மற்றும் நடைமுறைகளையும் ஆய்வு செய்தேன்.

அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டு வரப்படலாம் என்பதை அரசியலமைப்பு தெளிவாக அங்கீகரிக்கிறது. அதே நேரத்தில், பிரதமர் அல்லது ஒரு தனிப்பட்ட அமைச்சரவை அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை முன்னுதாரணமாக அங்கீகரிக்கிறது. ஆனால் பிரதி அமைச்சருக்கு எதிராக அத்தகைய தீர்மானத்திற்கு எந்த ஏற்பாடும் இல்லை.எனவே, இன்று அத்தகைய தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அது அரசியலமைப்பு மற்றும் பாராளுமன்ற முன்னுதாரணங்களுக்கு முரணான ஒரு விரும்பத்தகாத முன்னுதாரணத்தை ஏற்படுத்தும்.அதன்படி, இந்த அனைத்து விடயங்களையும் கருத்தில் கொண்டு, பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒழுங்கற்றது மற்றும் அதன் தற்போதைய வடிவத்தில் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை இந்த சபைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன் என்றார்.

இதன்போது,எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக்க எம்.பி. பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இவ்விடயம் குறித்து தங்களிடம் வினவிய போது இவ்விடயம் தொடர்பில் செயலாளர் சபையில் அறிக்கைக் கோரப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டீர்கள். அதேபோல் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இந்த பிரேரணை இடையூறாக அமையுமா என்பது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஆலோசனை கோரியுள்ளதாகக் குறிப்பிட்டீர்கள். தங்களுக்கு இவ்விரு தரப்பில் இருந்தும் அறிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அரசியலில் ஈடுபடும் தரப்பினர்கள் சகலருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வர முடியும் என்றார்.

## “கொண்டுவர முடியும்”

ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் சமர்ப்பித்த நம்பிக்கையில்லா பிரேரணை ஒழுங்கற்றது என அறிவித்த சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன அதனை நிராகரித்தபோதே இவ்வாறு தெரிவித்த எதிர்க்கட்சித்தலைவர் மேலும் கூறுகையில்,

Erskine May, Kaul & Shakdher போன்றவற்றில் பாராளுமன்ற சம்பிரதாயங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிறைவேற்று அதிகாரத்தைச் செயற்படுத்தும் பிரதி அமைச்சர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவதானது வெஸ்மினிஸ்டர் முறைமையாகும். பிரதி அமைச்சர் ஒருவர் நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு தரப்பாக மாறும்போது, நிலையியற் கட்டளைகளில் அது குறிப்பிடப்படவில்லை என்ற காரணத்திற்காக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதை நிராகரிக்க முடியாது.

நிலையியற் கட்டளைகளில் அமைச்சர்களுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் குறித்து தெளிவான குறிப்புகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இதனை கொண்டு மாத்திரம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர முடியாது என்று உங்களால் தெரிவிக்க முடியாது

அரசியலமைப்பின் 46 (1) ஆவது பிரிவின்படி, பிரதி அமைச்சர் நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்துவதால், இதுபோன்ற நம்பிக்கையில்லாப் பிரேரணைகளைக் கொண்டுவருவது சம்பிரதாயம். இது வெஸ்ட்மின்ஸ்டர் சம்பிரதாயம். குறிப்பாக, அரசியலமைப்பின் பிரிவு 45(3) இன் கீழ், பரந்த அரசியலமைப்பு சட்டகத்தின் மூலம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கான சந்தர்ப்பம் காணப்படுகின்றது

பாராளுமன்ற நடைமுறைகள் தொடர்பான முன்னுதாரணங்களை சபாநாயகர் பரிசீலனை செய்திருப்பாராக இருந்தால், பிரதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வர முடியும். சட்டமா அதிபரின் ஆலோசனையையும் செயலாளர் குழுவினால் வழங்கப்பட்ட அறிக்கையையும் இந்த சபையில் சமர்ப்பியுங்கள். இவற்றை பரிசீலித்து எதிர்க்கட்சியின் கருத்தைச் சபையில் முன்வைக்க சந்தர்ப்பமளியுங்கள் என்றார்.

## “பொதுமக்களின் காணிகளை...

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (11) அன்று இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரனால் வலிகாமல் வடக்கில் இதுவரை விடுவிக்கப்படாமல் இருக்கும் பொதுமக்களின் காணிகள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

மேலும் அமைச்சர் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் வலிகாம் வடக்கில் 2010ஆம் ஆண்டில் 12,376 குடும்பங்களை நேர்ந்த 42,699 பேர் இடம்பெயர்ந்தவர்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்தனர். அவர்களில் 10,981 குடும்பங்களைச் சேர்ந்த 38,693பேர் மீள் குடியேற்றப்பட்டிருந்தனர். எனினும், 1,395 குடும்பங்களை சேர்ந்த 4006 பேர் மீள் குடியேற்றப்படாமல் இருக்கின்றனர்.

இதேவேளை, 2009 காலத்தில் 23,850 ஏக்கர் காணி முப்படைகளின் கட்டுப்பாட்டிலிருந்தன. அவற்றில் பெரும்பாலான பகுதி விடுவிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது 2583 ஏக்கர் பகுதி விடுவிக்கப்பட வேண்டியுள்ளது.

எவ்வாறாயினும், இடம்பெயர்ந்த அனைவரையும் அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்த வேண்டும் என்ற கொள்கையிலேயே அரசாங்கம் செயற்படுகின்றது. இதன்படி, சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் ஊடாக அந்த காணிகளை மக்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றார்.

## பலரின் உயிர்களை காப்பாற்ற...

பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய சுற்றுலா பிரதி அமைச்சர், “மனித குலத்திற்கு எல்லைகள் இல்லை என்பதை அவரது தன்னலமற்ற செயல் நமக்கு நினைவூட்டுகிறது. மேலும், கிப்பின் இரக்கமும் தைரியமும் நெருக்கடியான தருணத்தில் உண்மையான மனிதத்துவத்தை வெளிப்படுத்தியது.

இந்த அங்கீகாரம், அசாதாரண சூழ்நிலைகளில் சாதாரண நபர்கள் வழங்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை எடுத்துக்காட்டுகின்றது. உலகளாவிய ஒற்றுமை உணர்வை வெளிப்படுத்தும் இலங்கையின் பாராட்டையும் பிரதிபலிக்கின்றது” என குறிப்பிட்டுள்ளார்.

## மனம்பேரியின் கார் சிக்கியது

மித்தெனியவைச் சேர்ந்த சம்பத் மனம்பேரி என்பவர் பயன்படுத்தியதாகக் கூறப்படும் ஒரு நவீன காரை, எம்பிலிபிட்டிய புதிய நகரத்தில் உள்ள ஒரு வாகன பழுதுபார்க்கும் நிலையத்துக்கு (கேரேஜ்) கொண்டு வரப்பட்ட ஒரு நவீன காரை, எம்பிலிபிட்டிய பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

வாகன பழுதுபார்க்கும் நிலையத்தின் உரிமையாளர் இல்லாதபோது, பழுதுபார்ப்பதற்காக ஒருவர் காரை கடந்த 7ஆம் திகதி கேரேஜூக்கு கொண்டு வந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இருப்பினும், காரை கொண்டு வந்த நபர் தனது தொலைபேசி இணைப்பை துண்டித்து விட்டுள்ளதாக, கேரேஜின் உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

எம்பிலிபிட்டிய பொலிஸார் நடத்திய விசாரணையில், அந்த கார் ஐஸ் கொள்கலன் சம்பவத்துக்குப் பின்னர் தலைமறைவாகியுள்ள சந்தேக நபரான சம்பத் மனம் பேரியுடையது என்பது தெரியவந்தது.

அதன்படி, அந்த கார் எம்பிலிபிட்டிய பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு, மேலும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## 30 ஆண்டு கால ஊழலை விசாரி...

இதற்கிடையில், போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்த இராணுவம் நாடு முழுவதையும் தனது கட்டுப்பாட்டு வளையத்துக்குள் கொண்டு வந்துள்ளது. பதற்றம் அதிகமுள்ள பகுதிகளில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். ஏற்கெனவே 19 பேர் உயிரிழந்துவிட்ட நிலையில், இனியும் வன்முறைச் சம்பவங்கள் நடக்கக் கூடாது என்பதில் இராணுவம் கவனமாக செயல்பட்டு வருகிறது.

சமூக வலைத்தளங்களில் அண்மையில் ‘நெப்போ பேபி’ என்ற பெயரில் வீடியோக்கள் பரவின. அதாவது நேபாளத்தின் அரசியல் தலைவர்கள், மூத்த அரசு அதிகாரிகள், பிரபலங்களின் வாரிசுகள் தங்களின் ஆடம்பர வாழ்க் கையை வீடியோவாக பதிவு செய்து சமூக வலைதளங்களில் வெளியிட்டு வந் தனர். இதைப் பொதுமக்கள் கடுமையாக விமர்சனம் செய்தனர்.

இந்தச் சூழலில் பேஸ்புக், யூ டியூப், எக்ஸ், டெலிகிராம் உள்ளிட்ட பதிவு செய்யப்படாத 26 சமூக வலைத்தள கணக்குகளை நேபாள அரசு கடந்த 5ஆம் திகதி முடக்கியது. சீனாவின் டிக்டாக் செயலிக்கு மட்டும் தடை விதிக்கப்பட வில்லை. இது, நேபாள இளம் தலை முறையினரிடையே கொந்தளிப்பை ஏற் படுத்தியது. கடந்த சில நாட்களாக 28 வயதுக்கு உட்பட்ட இளம் தலை முறையினர் தலைநகர் காத்மாண்டுவில் குவிந்து ஊழலுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர். அவர் கள் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தை முற்றுகையிட முயன்றனர்.

### கொழும்பு மத்திய பேருந்து முனையம்

# இன்று முதல் மூடப்படும்



கொழும்பில் உள்ள மத்திய பேருந்து முனையம் புதன்கிழமை(11) முதல் 10 மாத காலத்திற்குப் புனரமைப்பு பணிகளுக்காக மூடப்படும் என்று இலங்கை போக்குவரத்து சபை (SLTB) அறிவித்துள்ளது.

புனரமைப்பு முன்னெடுக்கப்படும் காலத்தில், புறக்கோட்டை, போதிராஜ மாவத்தை, குணசிங்கபுர மற்றும் பெஸ்டியன் மாவத்தை ஆகிய இடங்களில் இருந்து இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள் இயக்கப்படும் என்று இலங்கை போக்குவரத்து சபையின் பிரதி பொது மேலாளர் பி.எச்.ஆர். டி.சந்திரசிறி தெரிவித்தார்.

ஒருங்கிணைந்த கால அட்டவணையின் கீழ் உள்ளவை உட்பட நீண்ட தூர பேருந்துகள் பெஸ்டியன் மாவத்தை பேருந்து பணிமனையில் இருந்து இயக்கப்படும், அதேநேரத்தில், குறுகிய தூர பேருந்துகள் போதிராஜ மாவத்தையில் இருந்து இயக்கப்படும்.

புனரமைப்பு பணிகள் இலங்கை விமானப்படையால் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

புனரமைப்பு பணிகள் அரசாங்கத்தின் தூய்மையான இலங்கை தேசிய திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்று இலங்கை போக்குவரத்து சபையின் பிரதி பொது மேலாளர் இந்திக சண்டிமால் கூறினார்.

ஒரு வருடத்திற்குள் முடிக்க எதிர்பார்க்கப்படும் இந்த திட்டத்திற்காகக் கிட்டத்தட்ட ரூ.540 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இந்தப் புனரமைப்புத் திட்டம் 2026 செப்டெம்பர் 15ஆம் திகதி ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் தலைமையில் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்படும்.

## 35ஆவது ஆண்டு நினைவேந்தல்



■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் இனப்படுகொலையின் 35ஆவது ஆண்டு நினைவேந்தல் சத்துருக்கொண்டான் நாற்சந்தியில் அமைக்கப்பட்டிருக்கும் நினைவு தூபியில் செவ்வாய்க்கிழமை (9) மாலை இடம்பெற்றது.

கடந்த 1990ஆம் ஆண்டு செப்டெம்பர் 9ஆம் திகதி சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, பனிச்சையடி போன்ற பிரதேசங்களை இராணுவத்தினர் மற்றும் ஊர்காவல் படையினர் சுற்றிவளைத்து அங்கிருந்த குழந்தைகள் பெண்கள் உட்பட 186 பேரை போயிஸ் ரவுண் இராணுவ முகாம் பகுதிக்கு அழைத்துச் சென்று அவர்களை வெட்டி துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்து டயர்கள் போட்டு எரித்தனர்.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவேந்தல், நினைவு தூபியில் இடம்பெற்றது இதில் மட்டு. மாநகரசபை முதல்வர் சிவம்பாக்கியநாதன், பிரதி முதல்வர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், முன்னாள் மாநகரசபை முதல்வர் ரி.சரவணபவன், மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் பொதுமக்கள் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதில் 4 கிராமங்களைச் சேர்ந்த 4 பேர் ஒன்றிணைந்து பொது சுடர் ஏற்றியதையடுத்து, அங்கிருந்த அனைவரும் சுடர் ஏற்றி படுகொலை செய்யப்பட்டவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி மலர் தூவி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்திய பின்னர் படுகொலை செய்யப்பட்ட இராணுவ முகாம் அமைந்திருந்த பகுதியை அகழ்வு பணி முன்னெடுக்குமாறு சர்வதேச நீதி விசாரணை வேண்டும் என ஊடகங்கள் ஊடாக கோரிக்கை விடுத்தனர்.













## கத்திக்குத்தில் ஒருவர் உயிரிழப்பு

■ ஏ.எல்.எம்.ஷினாஸ்



அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை 65 மீட்டர் வீட்டுத் திட்டப் பகுதியில் இரு குடும்பஸ்தர்களுக்கிடையில் செவ்வாய்க்கிழமை (09) அன்று ஏற்பட்ட தகராறு பின்னர் கத்திக்குத்தாக மாறியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையான 29 வயதுடைய அலாவுதீன் ரிஷாத் என தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

உயிரிழந்தவருக்கும் அவருடைய முன் வீட்டில் வசித்து வந்த நபருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பின்னர் தகராறாக மாறியதில் கூறிய ஆயுதங்களினால் ஒருவரை ஒருவர் தாக்கியதில் அலாவுதீன் ரிஷாத் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இந்த சம்பவம் தொடர்பாக அம்பாறை மாவட்ட விசேட தடயவியல் பொலிஸார் ஸ்தலத்திற்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



## “மாமா பேருந்தை மீண்டும் பெற்றுதாங்க”

■ வசந்தி

இடைநிறுத்தப்பட்ட பேருந்து சேவையை மீள சேவையிலீடுபடுத்துமாறு கோரி மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப்பற்று பிரதேசத்தின் நவகிரிநகர் பகுதியை சேர்ந்த பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் புதன்கிழமை(10) அன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பிலிருந்து தினமும் போரதீவுப்பற்று பிரதேசத்தின் நவகிரி நகர் வரையில் போக்குவரத்தில் ஈடுபட்ட வந்த இலங்கை போக்குவரத்து சபையின் மட்டக்களப்பு வீதிக்குச் சொந்தமான பேருந்து அப் பகுதிக்குரிய சேவையை ஒருவார காலத்திற்கு மேலாக நிறுத்தியதாகத் தெரிவித்து, அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் இணைந்து பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

“டிஸ் மாமா பேருந்து வண்டியை மீண்டும் பெற்று தாங்க, நாங்களும் ஏனையோரைப் போன்று படிக்க வேண்டும், எமது கிராம மக்களின் குரல் தான் ஆர்.டிஎஸ், எமது குரலை அடக்கும் பாசிச அரசியல் வாதிகளே ஒழிக, அரசாங்கமே எங்களுடைய அடிப்படை உரிமையான போக்குவரத்தின் பறிக்காதே, காலையில் யானைத் தொல்லை, மாலையில் மாடுகளால்தொல்லை, பாடசாலை செல்வதும் போக்குவரத்து தொல்லையாகிவிட்டது” போன்ற பல வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வெல்லாவெளியில் அமைந்துள்ள போரதீவுபற்று பிரதேச சபைக்கு முன்னால் உழவு இயந்திரங்களில் வந்திறங்கி ஒன்றுகூடிய பொதுமக்கள், கோஷங்களை எழுப்பியவாறும், பதாதைகளை ஏந்தியவாறும் வெல்லாவெளியில் அமைந்துள்ள பிரதேச செயலகம் வரை சென்றனர். பிரதேச செயலகத்திற்கு முன்னால் வைத்து இலங்கை போக்குவரத்து வீதியின் போக்குவரத்து சேவையை மீறப் பெற்றுத்தருமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.






# நேபாளத்தை கொளுத்திய 'நெப்போ பேபி'யும் இலங்கை அரகலயவும்

தெற்காசிய நாடுகளில் ஒன்றான நேபாளத்தில், சமூக வலைத்தளங்களான பேஸ்புக், யூ டியூப், எக்ஸ், டெலிகிராம் உள்ளிட்ட பதிவு செய்யப்படாத 26 சமூக வலைதள கணக்குகளை நேபாள அரசாங்கம் கடந்த 5 ஆம் திகதி முடக்கியது. சீனாவின் டிக்டாக் செயலிக்கு மட்டும் தடை விதிக்கப்படவில்லை. இந்த தடைவிதிப்பு, நேபாள இளம் தலைமுறையினரிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

அதனையடுத்து அங்கு போராட்டங்கள் வெடித்தன. அந்நாட்டின் சமூக வலைத்தளங்களில் 'நெப்போ பேபி' என்ற பெயரில் வீடியோக்கள் அண்மையில் பரவின. அதாவது நேபாளத்தின் அரசியல் தலைவர்கள், மூத்த அரசு அதிகாரிகள், பிரபலங்களின் வாரிசுகள் தங்களின் ஆடம்பர வாழ்க்கையை வீடியோவாக பதிவு செய்து சமூக வலைத்தளங்களில் வெளியிட்டு வந்தனர். இது அங்குள்ள இளைஞர்களிடத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

இளம் தலைமுறையினர் தலைநகர் காத்மாண்டுவில் குவிந்து ஊழலுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர். இந்நிலையில் போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 19 பேர் உயிரிழந்தனர். 400க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். ஒருகட்டத்தில் பாராளுமன்றத்துக்கும் அமைச்சர்கள், நீதியரசர்களின் வீடுகளுக்குத் தீயிட்டுக் கொளுத்தினர். கலவரத்தில் நேபாள முன்னாள் பிரதமர் ஜலாநாத் காநலின் மனைவி ராஜ்யலக்ஷ்மி சித்ராகர் உயிருடன் கொளுத்தப்பட்டார்.

ஜனநாயக ரீதியான போராட்டத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டை அடுத்து, அங்கு கலவரம் வெடித்தது. தீவைத்தனர். முன்னாள் அமைச்சர்களை அடித்து இழுத்துச் சென்றனர். இதேபோன்றதொரு நிலைமை இலங்கையில் 2022 மே 9 ஆம் திகதியன்று இடம்பெற்றது.

இலங்கையின் 'அரகலய' போராட்டத்தின்போது, அன்று, ராஜபக்ஷ ஆதரவாளர்கள் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியது பெரும் வன்முறையாக வெடித்தது, இதில் 130க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இது இலங்கையின் வன்முறை அரசியல் கலாச்சாரத்தின் தொடக்கமாகக் கருதப்படுகிறது. இந்த சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் உட்பட பலர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இலங்கையின் வன்முறை அரசியல் கலாசாரத்தின் தொடக்கமாகக் கருதப்படும் காலி முகத்திடலில், மக்கள் எழுச்சியின் கூட்டான வலிமையைக் கண்டு அச்சமடைந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் பயப்படத் தொடங்கியதை இது உணர்த்தியது. இவ்வாறான நிலையில், நேபாளத்தில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களை அடுத்து, ஜென் z போராட்டக்காரர்கள்

பொதுமக்களின் நம்பிக்கையை இழந்துவிட்ட பாராளுமன்ற பிரதிநிதிகள் சபையை உடனடியாகக் கலைக்க வேண்டும்.

குடிமக்கள், நிபுணர்கள், இளைஞர்கள் பிரதிநிதித்துவத்தோடு நேபாள அரசமைப்பை முழுவதுமாக திருத்தி எழுத வேண்டும். கடந்த 30 ஆண்டுகளாக நடந்த ஊழல் குறித்தும், அரசுடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பாகவும் தீவிர விசாரணை நடத்த வேண்டும் என்றும் ஜென் z போராட்டக்காரர்கள் நிபந்தனைளை விதித்துள்ளனர்.

ஒரு நாட்டில் ஊழல் மோசடி இடம்பெற்றால், ஜனநாயக போராட்டத்தைத் தவிர்க்க முடியாது. அந்த போராட்டத்தை அதிகாரத்தைக் கொண்டு அடக்க முயன்றால், இழப்புகளையும் தவிர்க்க முடியாது என்பதை ஜனநாயக நாடுகள் கவனத்தில் கொள்வது அவசியம்.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# "ஜனாதிபதி தமிழர் முகங்களில் கரிபூசியுள்ளார்"

முருகானந்தன் தவம்

கடந்த 1ஆம் திகதி ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வடக்கிற்கு இரு நாள் விஜயம் செய்து யாழ்ப்பாணம் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்தின் 3ஆவது கட்டத்தின் பணிகள், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் யாழ். பிரதேச அலுவலகத் திறப்பு ,யாழ்ப்பாணம், மண்டை தீவு பகுதியில் நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள நவீன கிரிக்கெட் மைதானத்தின் பணிகள் ,உலக தென்னை தினத்தை முன்னிட்டு புதுகுடியிருப்பில் 'கப்துரு சவிய' தேசிய வேலைத்திட்டம், முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணிகள் போன்ற அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்து வைத்துள்ளதுடன் சர்ச்சைக்குரிய கச்சத்தீவுக்கும் அதிரடி விஜயம் செய்து அங்குச் சென்ற முதல் ஜனாதிபதி என்ற பெயரையும் வரலாற்றில் பதிவு செய்துகொண்டார்.

செப்டம்பர் 1 ஆம் திகதி ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வடக்கிற்கு இரு நாள் விஜயம் செய்யவுள்ளதாக அறிவிப்புக்கள் வெளியான நிலையில், இந்த விஜயத்தின்போது, ஜனாதிபதி நாட்டினதும் சர்வதேசத்தினதும் கவனத்தை ஈர்த்துள்ள செம்மணி மனிதப்புதைகுழி அகழ்விடத்திற்குச் செல்வார் என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்களிடம் தமிழ் அரசியல் தரப்புக்களிடமும் ஏற்பட்டிருந்தது. ஜனாதிபதி செம்மணி மனிதப்புதைகுழி அகழ்விடத்திற்கு வருகை தர வேண்டுமென்ற வேண்டுகோள்களும் விடுக்கப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணத்தில் வைத்து ஜனாதிபதி உரையாற்றும் போது, "செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வில் எவ்வித மாற்றமும் இல்லை. செம்மணியில் தோண்டப்படும் மனித எச்சங்கள் தொடர்பாக நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் இந்த விசாரணைகளில் எவ்வித மாற்றங்களும் ஏற்படாது" என தமிழ் மக்களுக்கு உறுதியளித்த நிலையில் அவர் எப்படியும் செம்மணிக்கு வந்து மனிதப் புதைகுழிகளை பார்வையிடுவார் என்றும் இதன்மூலம் தனக்கும் தனது கட்சிக்கும் பெருமளவில் வாக்களித்த தமிழ் மக்களுக்கு அவர் ஒரு செய்தியைச் சொல்வார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

ஜனாதிபதி அனுரகுமார செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு நடைபெறும் இடத்திற்கு விஜயம் செய்வார் என முன்னதாக, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரும் கூறியிருந்தார். அதுமட்டுமன்றி அரச தரப்பின் பல்வேறு தரப்பினராலும் உறுதியுமளிக்கப்பட்டிருந்தது. ஆனால், யாழ்ப்பாணத்திற்குக் குறிப்பிட்ட நாளுக்கு முதல் நாளே வந்து விட்ட ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் ஒரு நாள் முழுவதும் தங்கிநின்றபோதும் செம்மணி வீதியை ஜனாதிபதி வாகனத் தொடரணியாக கடந்து பயணித்த போதிலும், செம்மணி மனித புதைகுழியைச் சென்று பார்வையிடவில்லை.செம்மணிப் பகுதியில் வாகனத்தை மெதுவாகச் செலுத்திக் கூட அப்பகுதியைப் பார்க்க அவர் விரும்பவில்லை.

ஜே .வி.பி.-தேசிய மக்கள் சக்தி அமைச்சர்,எம்.பிக்கள் ஏற்கெனவே செம்மணி மனிதப் புதைகுழியைச் சென்று பார்வையிட்ட நிலையில், இலங்கையில் செம்மணி மட்டுமன்றி, கொக்குத்தொடுவாய், மண்டைதீவ, மன்னார், கொழும்பு துறைமுகம் என பல இடங்களில் மனிதப் புதைகுழிகள் உள்ளநிலையில், இந்த புதைகுழிகளின் உரிமையாளர்கள் ரணில் மற்றும் ராஜபக்ஷக்களே தவிர நாம் அல்ல. இந்த புதைகுழிகள், காணாமல் ஆக்கப்பட்டோருடன் தொடர்புடைய சிலர் வடக்கிலும் உள்ளனர். செம்மணி மனிதப் புதைகுழியுடன் தொடர்புடையவர்கள் வடக்கில் உள்ளூராட்சி சபைகளுக்கும் தெரிவாகியுள்ளனர். இந்த மனிதப் புதைகுழிகள் தொடர்பிலான, விசாரணைகள் போன்றவற்றுக்கு நாம் போதியளவு நிதியை ஒதுக்கி வசதிகளைச் செய்து கொடுத்துள்ளோம் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க பகிரங்கமாகவே அறிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில், யாழ்ப்பாணம் சென்ற ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க செம்மணி மனிதப் புதைகுழியைச் சென்று பார்வையிட்டிருக்க முடியும். ஆனால், தமக்கோ, தமது கட்சிக்கோ, தமது அரசுக்கோ தொடர்பில்லாத செம்மணி மனிதப் புதைகுழியை ஜனாதிபதி அனுரகுமார பார்வையிடாததற்கு இனவாத சிந்தனையும் சிங்களவர்களை மட்டும் திருப்திப்படுத்தும் அரசியலுமே பிரதான காரணம். இந்த செம்மணி மனிதப் புதைகுழி புறக்கணிப்பு மூலம் சிவப்பு சட்டைக்காரர்களான ஜே .வி. பியினர் இன்னும் இனவாதத்திலிருந்து மாறவில்லை .அவர்கள் ஒருபோதுமே மாறப்போவதில்லை.'மாற்றம்', 'புதிய திசை' என்பதெல்லாம் வெறும் கோஷம் என்பதையே ஜனாதிபதி அநுரகுமாரவின் யாழ்ப்பாண விஜயம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி அனுரகுமார தனது பயண நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படாத அல்லது உள்ளடக்கப்பட்டும் இறுதிவரை வெளிப்படுத்தப்படாத கச்சத்தீவு பயணத்தை மேற்கொண்டுள்ளார். இதன்மூலம் இந்தியாவைப் பகைக்க நேரிடும், அழுத்தங்களை எதிர்கொள்ள நேரிடும் அரசியல் ரீதியான சர்ச்சைகளை ஏற்படுத்தும் என தெரிந்தும் சிங்கள, தமிழர்களைத் திருப்திப்படுத்த, எமது நிலத்தின் ஒரு அங்குலத்தையேனும் விட்டுக்கொடுக்க நாம் தயாரில்லையென்பதனை வெளிப்படுத்தவே சிங்கள, தமிழ் அரசியல் ஆதாயத்திற்காக ஜனாதிபதி கச்சத்தீவுக்குக் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டு வரலாற்றுப்பதிவை ஏற்படுத்தினார்.

அதே ஜனாதிபதி யாழ்ப்பாணத்திற்குள் உள்ள செம்மணி மனித புதைகுழிப் பகுதிக்கும் விஜயம் செய்திருந்தால், இலங்கையில் அகழப்படும் மனிதப் புதைகுழிப் பகுதியைச் சென்று பார்வையிட்ட முதல் ஜனாதிபதி என்ற வரலாற்றுப் பதிவிலும் ஜனாதிபதி அனுரகுமார இடம்பிடித்திருப்பார். தமிழ் மக்கள் மனங்களிலும் நீங்கா இடம்பிடித்திருப்பார். ஆனால், சிங்களவர்களினால், சிங்கள படைகளினால் ஏற்படுத்தப்பட்ட மனிதப் புதைகுழியைப் பார்வையிட்ட ஜனாதிபதி என சிங்களவர்களினால் புறக்கணிக்கப்பட்டிருப்பார், வெறுக்கப்பட்டிருப்பார், விமர்சிக்கப்பட்டிருப்பார். ஆகவே, தான் சிங்களவர்களே முதல் விருப்பத் தெரிவு, அவர்களைப் பகைக்க முடியாது என்ற அடிப்படையில்தான் ஜனாதிபதி அனுரகுமார செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு இடத்திற்குச் செல்லவில்லை.

அரசுக்கு எதிராக ஆயுத கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தாலும் ஜே.வி. பியினர் ஒன்றும் புனிதமானவர்களோ மாற்றமானவர்களோ அல்ல. அவர்களும் பக்கா இனவாதிகள்தான். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை அழிக்க 50,000 சிங்கள இளைஞர்களை இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு செய்து கொடுத்தவர்கள்.அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான நோர்வே அனுசரணையிலான சமாதான முயற்சிகளைச் சீர்குலைத்து யுத்தத்துக்குத் தூண்டியவர்கள் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சுனாமி பொதுக் கட்டமைப்பை கடுமையாக எதிர்த்து மக்களைத்தூண்டி போராட்டங்களில் ஈடுபட்டவர்கள், இலங்கை -இந்திய ஒப்பந்தத்தின் பயனாக இணைக்கப்பட்ட தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கு மாகாணங்களை வழக்கு தாக்கல் செய்து பிரித்தவர்கள். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை அழித்தொழிக்க ஆட்சி பீடமேறிய அனைத்து அரசுகளுக்கும் நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியவர்கள்.

ஆகவே, என்னதான் தேசிய மக்கள் சக்தி என்ற முகமூடியைப் போட்டு 'மாற்றம்' ஏற்படுத்த வந்தவர்களாக, புதிய திசையில் நாட்டையும் மக்களையும் பயணிக்க வைக்க வந்தவர்களாக தம்மைக் காட்டிக்கொள்ள ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கா தலைமையிலான ஜே.வி. பியினர் என்ற இனவாதிகள் மாறு வேடத்தைப் போட்டாலும், 'போக்கிரி' படத்தில் வரும் வடிவேலு போல் 'மண்டை மேல இருந்த கொண்டையை மறந்துட்டியே' என்ற கதையாகவே தமது இனவாத சிந்தனையிலிருந்து அவர்கள் மாறவே இல்லையென்பதனையும் மாறப்போவதில்லை என்பதனையும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் அண்மைய யாழ்ப்பாண விஜயமும் செம்மணி மனிதப் புதைகுழி விடயமும் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. அத்துடன், இலங்கையின் ஆட்சியாளர்கள் அனைவரும் 'ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்' தான் என்பதனை தமிழ் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி என்ற பெருமையைப் பெற்ற ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவும் நிரூபித்து தமிழர் முகங்களில் கரிபூசியுள்ளார்.



## வாழ்வியல் தரிசனம்

வெறுப்பு உணர்வு சந்தோஷத்துக்கு வேட்டு. எந்த நேரமும் முகத்தைக் கோணலாக வைத்தபடி, எதனையோ இழந்தபடி இருப்பவர்களை எவர்தான் ரசித்து மகிழப் போகின்றார்கள்.

வாழக்கையை ரசிக்கத் தெரியாதவர்கள் எல்லாவற்றையும் கைவிட்டது போல் நடப்பதுண்டு. தொடர்ந்து துன்பங்கள், தோல்வி, நினைத்தவை நடக்காவிட்டால் அதிலிருந்து மீளும் வரை சோக இருளில், தங்கள் உருவத்துடன் வெறுத்து உலர்ந்த நிலையில் இருப்பது துணிச்சலற்ற நிலையைக் காட்டுகின்றது.

அவரவர் கஷ்டங்கள் அவரவர்களுக்கே தெரியும் என்பார்கள். ஆனால், கஷ்ட, நஷ்டங்களைச் சந்திக்காதவர்கள் எவருண்டு.

பிரச்சினைகளை அப்படியே நிலையாக வைத்தபடி, அடுத்து உடன் எழுந்து களையாமல் இருப்பது தன்னைத்தான் சிதைப்பதாக அமையும். பழையதைத் துறந்து, புது வழி தேடுதலைச் சிரமம் என கருதலாகாது. பலவீனத்துடன் வாழ்வது எழுச்சியைக் களைவது போலாகும். எழுவது சிரமம் அல்ல. சும்மா இருப்பதே கடினம். செயல்படுவது மேல்.

– பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### நெல்லுக்கு பொல்லாத நோய்



அனுராதபுரம், மகாபுலன்குளம் பகுதியில் உள்ள சுமார் இருநூறு ஏக்கர் நெல் சாகுபடி விவசாயிகள், அடையாளம் தெரியாத நோயால் முற்றிலுமாக அழிக்கப்படும் அபாயத்தில் இருப்பதாகக் கூறுகின்றனர்.

நெல் பழுக்கும் நிலையை அடையும் வரை மிகவும் நல்ல நிலையில் இருந்தது. பின்னர் நெல் தண்டுகள் வெண்மையாக மாறி, நெல் காய்கள் அழுகிவிட்ட ன என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

இது ஒரு சிலந்தி, அசுவினி அல்லது பூஞ்சை நோய் என்று நினைத்து பல்வேறு பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்தியதாக விவசாயிகள் தெரிவித்தனர். ஆனால், எந்த பலனும் கிடைக்கவில்லை.

மகாபுலன்குளம் குளத்தின் கீழ் பயிரிடப்பட்ட மகாவெல மற்றும் தங்கஸ்ஸ பகுதிகளில் இருநூறு ஏக்கருக்கும் அதிகமான நெல் வயல்கள் அழிக்கத் தொடங்கியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மேற்கூறிய அடையாளம் தெரியாத நோயால் ஒரு ஏக்கரில் இருந்து இருபத்தைந்து புசல் நெல் கூட பெற முடியாததால், அரசாங்கத்திடம் நியாயமான இழப்பீடு கோருவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

மேலும் இது தொடர்பாக உரிய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 21ஆம் நூற்றாண்டின்

# கல்வியும் கல்விப்புலம் சார்ந்தோரின் வகிபங்குகளும்



சிவசாமி மனோகரன்,
ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர்,
மகாவலி தேசிய கல்வியியற் கல்லூரி.

21ஆம் நூற்றாண்டு என்பது 2001 ஜனவரி மாதம் தொடக்கம் 2100 டிசெம்பர் மாதம் வரையிலான காலங்களை உள்ளடக்கிய நூற்றாண்டாகும். இந்நூற்றாண்டின்போது சடுதியான மாற்றங்கள் பல நிகழ்ந்து வருவதோடு தொழில்நுட்பத்தின் செல்வாக்கு செயற்கை நுண்ணறிவின் தாக்கம் என்பன ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இதன் காரணமாக பூகோள பிரசையை உருவாக்கும் நோக்குடன் 21ஆம் நூற்றாண்டின் கல்வியானது பொருளாதார தொழிநுட்ப மற்றும் சமூக மாற்றங்களுக்குரித்தான சவால்களை வெற்றிகொள்ளத்தக்கதான வகையிலே கட்டமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் மற்றும் தொழில்கொள்வோர்களுக்கு அவசியமான நுண்ணாய்வுச் சிந்தனை, பிரச்சினைத் தீர்த்தல், தொடர்பாடல் திறன், இணைந்து கற்றல், ஆக்கத்திறன், தகவல் தொழில்நுட்பத் திறன் என்பன இக்கல்விமுறையின் பிரதான அம்சங்களாக விளங்குகின்றன.

21ஆம் நூற்றாண்டின் கலைத்திட்டமானது மாணவர்களைச் சிக்கலான வேகமாக மாறும் உலகத்துக்குத் தயார்ப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட கலைத்திட்டமாகும். இது தொழில்நுட்பம், சமூக இணக்கம் மற்றும் உலகளாவிய விழிப்புணர்வு ஆகியனவற்றை ஒருங்கிணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டதாகும். உலகளாவிய பிரசையை (Globel Citizen) உருவாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள பாடசாலைக் கலைத்திட்டமானது பின்வரும் முக்கிய அம்சங்களை உள்ளடக்கியுள்ளமையைக் காணலாம்.

- **STEM கல்வி:** (விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம்) இக்கல்வி முறையானது செயற்றிட்ட அடிப்படையிலான கற்றல் மூலம் விமர்சனச் சிந்தனை, (Critical Thinking ) பிரச்சினைத் தீர்க்கும் திறன் (Problem Solving) மற்றும் ஆக்கத்திறனை (Creativity) வளர்க்கக் கூடியதாக இருக்கும்.
- **செயற்றிட்ட அடிப்படையிலான கற்றல்:** மாணவர்கள் நிஜ உலக பிரச்சினைகள் மற்றும் சவால்களைத் தீர்க்கும் வகையில் கற்றல் நிகழ்த்தப்பட வேண்டும். இது ஒத்துழைப்புஇ விமர்சனச் சிந்தனை மற்றும் புத்தாக்கத்தை வளர்க்கக் கூடியதாக இருக்கும்.
- **சமூகக் கல்வி:** உலகளாவிய விழிப்புணர்வு, கலாசார பன்முகத்தன்மை மற்றும் சமூகப் பொருளாதார மாற்றங்களை புரிந்து கொள்ளும் திறன்களை வளர்க்கும் வகையில் இது பரந்துபட்டதான உலக விழிப்புணர்வை ஏற்படுத்தவதாக அமையும்.
- **மொழிக்கலை:** மொழியை மிகச் சிறப்பாகப் பயன்படுத்துவதோடு வாசிப்பதும் எழுதுவதும் பேசுவதும் செவிமடுப்பதும் அகிய நான்கு மொழித்திறன்களை வலுப்படுத்தல் இதனூடாக எதிர்பார்க்கப்படுகிறது.
- **கலை மற்றும் மனித நேயக்கல்வி:** ஆக்கத்திறன், விமர்சன சிந்தனை மற்றும் மனிதநேயம் ஆகியவற்றை வளர்க்கும் வகையில் இப்பாடம் உள்ளடக்கப்பட்டுள்ளது.
- **டிஜிட்டல் குடியுரிமை:** தொழில்நுட்பத்தின் பொறுப்பான பயன்பாடு மற்றும் டிஜிட்டல் பாதுகாப்பு பற்றிய அறிவுறுத்தல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. நவீன கருவிகளை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தும் திறன்களை விருத்தி செய்தல் இதனூடாக எதிர்பார்க்கப்படுகிறது.
- **உடல்நலம் மற்றும் ஆரோக்கியம்:** உடல் மற்றும் உள ஆரோக்கியம், ஊட்டச்சத்து மற்றும் சுயகவனிப்பு என்பன தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பூரண ஆரோக்கியச் செயன்முறைகள் முக்கியத்துவம் பெறும் வகையில் இதன் உள்ளடக்கம் அமைந்துள்ளது.
- **முயற்சியாண்மை மற்றும் புத்தாக்கம்:** மாணவர்களிடையே பிரச்சினைத் தீர்க்கும் திறன் படைப்பாக்கத்திறன்களை வளர்க்கும் வழிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்திற்கு மாணவர்களைச் சிறப்பாக ஆயத்தம் செய்யும் வகையிலான பொருளாதார மேம்பாட்டு வழிமுறைகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
- **சுற்றாடற்கல்வி:** காலநிலை மாற்றம் பேண்தகு தன்மை மற்றும் பாதுகாப்பு தொடர்பான அறிவு இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மாணவர்களை சூழல் நேயப் பண்பு கொண்டவர்களாக விருத்தி செய்யும் வகையிலான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவை பேண்தகு அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன.
- இவ்வகையில் 21ஆம் நூற்றாண்டின் கலைத்திட்டமானது தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்து மாணவர்களின் நெகிழும் தன்மை, தலைமைத்துவம் சமூகத்திறன்கள் போன்ற வாழ்க்கைத் திறன்களை விருத்தியாக்கும் வகையிலே பன்முகத் தனமைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- 21ஆம் நூற்றாண்டுக் கல்வியின் முக்கிய அம்சங்களை நோக்கும் போது மாற்றமடைந்த விடயங்களில் வகுப்பறைக் கற்றலும் கற்பித்தலும் மிக முக்கிய இடம்பெறுவதைக் காணலாம். இந்த வகையில் 21ஆம் நூற்றாண்டிலே சகல துறைகளிலும் ஏற்பட்டுள்ள சடுதியான மாற்றங்களும் இந்த மாற்றங்களைத் தோற்றுவிப்பதில் அதிகளவு தாக்கங்களை ஏற்புடுத்திய தொழில்நுட்ப முன்னேற்றமும் வகுப்பறைக் கற்றல் கற்பித்தலில் செல்வாக்குச் செலுத்தியள்ளன.
- கல்வி முறைகள் சமூக, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப மாற்றங்களைப் பிரதிபலிக்க வேண்டும். மாணவர்கள் வேகமாக மாறும் உலகில் வெற்றி பெறத் தேவையான அறிவு, திறன் மற்றம் மனப்பாங்குடன் உருவாக்கப்பட வேண்டும். இதற்கு மாற்றம் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் வகுப்பறைக் கற்றல் கற்பித்தலில் தாக்கம் செலுத்துகிறது.
- இந்த வகையிலே 21ஆம் நூற்றாண்டின் கல்வி முறையில் மாணவர்களை மையப்படுத்திய கற்றலுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. இத்தகைய கற்றல் முறைகள் மாணவர்களின் தேவைகள், திறன்கள் மற்றும் தேரச்சிகளை முன்னிலைப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்படுகின்றன. இவை தொடர்பாடல், ஒத்துழைப்பு, விமர்சன சிந்தனை, பிரச்சினைத் தீர்த்தல் படைப்பாற்றல், தகவல் மற்றும் ஊடக எழுத்தறிவு போன்ற திறன்களை வளர்ப்பதாக அமையும்.

அடுத்ததாக செயற்றிட்ட அடிப்படையிலான கற்றல் முறையானது 21ஆம் நூற்றாண்டின் கல்வி முறையிலே முதன்மைப்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். மாணவர்கள் நிஜ உலக பிரச்சினைகளைத் தீரக்கும் செயற்றிட்டங்களில் ஈடுபடுவார்கள். இது ஒத்துழைப்பு, இணைந்து செயலாற்றல், விமர்சன சிந்தனை மற்றும் ஆக்கத்திறனை ஊக்குவிக்கும்.

21ஆம் நூற்றாண்டு கற்றல் கற்பித்தலிலே மிக தாக்கத்தை ஏற்படுத்திய முறை புரட்டப்பட்ட வகுப்பறையாகும் (Flipped classroom). மாணவர்கள் தத்தமது வீடுகளிலே வீடியோ மற்றும் ஒன்லைன் வளங்கள் மூலம் கற்றுக்கொண்டு வகுப்பறையில் குழு விவாதங்கள், செயற்பாடுகள், செயற்றிட்டங்கள் மூலம் ஆழமான கற்றலை மேற்கொள்வதாக இது அமையும்.

இதற்கடுத்தபடியாக விசாரணை மூலம் கற்றலானது 21ஆம் நூற்றாண்டுக் கற்றலில் பிரபல்யமடைந்த ஒரு முறையாகவுள்ளது. இது மாணவர்கள் வினாக்களை எழுப்பியவாறு ஆராய்ச்சி செய்தவாறே தாங்களாகவே விடைகளைக் கண்டறிவதாக அமையும். இது சுயகற்றலைத் தூண்டி மாணவர்களது கற்றல் வேகத்தை அதிகரிப்பதற்கு உதவுகிறது.

டிஜிட்டல் மற்றும் நிகழ்நிலை தொலைக்கல்வி என்பனவும் 21ஆம் நூற்றாண்டுக் கற்றலில் செல்வாக்குச் செலுத்துவதைக் காணலாம்.

மையப்பயன்பாடு, டிஜிட்டல் கருவிகள், செயற்கை நுண்ணறிவு, (Augmented Reality Robotics) போன்ற தொழில்நுட்பங்கள் கற்றலில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

21ஆம் நூற்றாண்டு கல்விமுறையிலே மாற்றமடைந்த விடயங்களில் கணிப்பீட்டு மதிப்பீட்டு முறையானது மிக முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. இவை மாணவர்களின் கற்றல் திறன்களை முழுமையாகக் கணிப்பிடும் வகையில் புதிய விசேடமான தனிப் பயனாக்கப்பட்ட முறைகளைக் கொண்டுள்ளது. இக்கணிப்பீட்டு முறைகளின் பிரதான அம்சங்களாக பின்வருவனவற்றறைக் குறிப்பிடலாம்.


- **செயற்றிட்ட அடிப்படையிலான கணிப்பீடு:** மாணவர்கள் நிஜ உலக பிரச்சினைகள் மற்றும் சவால்களைத் தீர்க்கும் வகையில் செயல்முறைகளைப் பயன்படுத்தி கற்றலை வெளிப்படுத்துகிறார்கள். அது விமர்சன சிந்தனை, ஒத்துழைப்பு மற்றும் ஆக்கத்திறனை ஊக்குவிக்கிறது.
- **தனிப்பயனாக்கப்பட்ட கணிப்பீடு:** இம்முறையிலே டிஜிடல் தொழில்நுட்பங்களின் உதவுயுடன் மாணவர்களின் தனிப்பட்ட தேவைகள் மற்றும் கற்றல் பாங்குகளுக்கு ஏற்ப கணிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது. அதனால் ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவரினதும் பலவீனங்கள் மற்றும் பலங்களை அடையாளம் காண முடிகிறது.
- **இடையீட்டு பின்னூட்டல்:** மாணவர்கள் தங்கள் பலங்கள் வலிமைகள் மற்றும் விருத்திக்கான வழிமுறைகளைப் புரிந்துகொள்ள இடையீட்டு பின்னூட்டல்கள் வழங்கப்படும். இது மாணவர்களின் தொடர்ச்சியான கற்றல் விருத்தியை ஊக்குவிக்குறது.
- **கூட்டு மதிப்பீடு:** மதிப்பீடு என்பது ஒருவழி செயன்முறையல்ல. மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் ஆகியோர் கலந்து செயல்படும் கூட்டுச் செயல்களைக் கொண்டதாக இவ்வகை மதிப்பீடுகள் இருக்கின்றன.
- **உண்மையான மதிப்பீடு:** நிஜ உலக சவால்களை உருவகப்படுத்தி மாணவர்கள் தங்கள் திறன்களையும் அறிவையும் கருத்துள்ள முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கான திறன்களை ஏற்படுத்தும் வகையில் இது இடம்பெறும்.
- **தகவல் தொழில்நுட்பம் மற்றும் கற்றல் பகுப்பாய்வு:** கணினி, கிளவுட், ஸ்மார்ட் போன்கள் BYOD ( Bring Your Own Device) போன்ற தொழில்நுட்பங்கள் மதிப்பீட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இத்தகைய தொழில்நுட்ப வளங்களைக் கொண்டதாக இந்த கணிப்பீடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- புதிய கணிப்பீட்டு மதிப்பீட்டு முறைகள் மாணவர்களின் பல்வேறு திறன்களை மதிப்பிடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. பின்வரும் கணிப்பீட்டு, மதிப்பீட்டு முறைகள் மாணவர்களின் திறன்களை வெளிப்படுத்த பல்வேறு வழிகளில் உதவுவதைக் காணலாம்.
- சுயமதிப்பீடு மற்றும் சகபாடி மதிப்பீடு.
- திட்ட அடிப்படையிலான கற்றல்.
- ஆராய்ச்சி மற்றம் பிரச்சினைத் தீர்க்கும் செயன்முறைகள்.
- தனிப்பட்ட திறன்கள் மற்றும் பல்திறன் மதிப்பீடு.
- தொழில்நுட்பம் மற்றும் வகுப்பறை தரவு சேகரிப்பு.
- குழுப்பணிகள் மற்றும் சமூக சேவைத் திட்டங்கள் 21ஆம் நூற்றாண்டில் கணிப்பீட்டு, மதிப்பீட்டு முறைகள் முக்கியமாக மாணவர்களின் சிந்தனைத் திறன், செயற்பாட்டுத் திறன், படைப்பாற்றல் ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் மாற்றம் பெற்றுள்ளன. இவை பழைய மரபு ரீதியான பரீட்சை முறைமைகளிலிருந்து முற்றாக வேறுபட்டதாக அமைந்திருப்பதை நோக்கலாம்.

இவை மாணவர்களின் அறிவை மாத்திரமன்றி, ஆராய்ச்சித் திறன், சிந்தனையின் ஆழம், படைப்பாற்றல், திறன், சமூகத் திறன், நேர முகாமைத்துவம், போன்ற பல்வேறு திறன்களை வெளிப்படுத்தி முழுமையான வளர்ச்சிக்கு வழிவகுப்பதாக உள்ளன. இவை வெற்றிகரமான உற்பத்தி மற்றும் சமூக பொறுப்புமிக்க உறுப்பினர்களாக மாணவர்களை உருவாக்கும் நோக்குடன் வடிவமைக்கப்பட்ட

(தொடரும்...)



# மனக்கசப்பை குறைக்கும்



நா.உசாந்தினி,
ஊடகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

மனித வாழ்வின் ஓர் அங்கமாக இயற்கை மனிதனோடு இணைந்து வீறு நடை போடுகின்றது. சமூகங்கள் என்பது பல்வேறு நிலைப்பாடுகள் நம்பிக்கைகள் வாழ்க்கை முறைகள் கொண்ட மக்களால் உருவான அமைப்பாகும். இத்தகைய சமூகத்தில் ஒற்றுமையை சீர்குலைக்கும் பல்வேறு பிரச்சினைகள் காலத்தின் தொடர்ச்சியால் ஏற்படுகின்றன. குறிப்பாக யானை – மனித மோதல், போக்குவரத்து பிரச்சனை, வறுமை, சிறுவர் தொழிலாளர் பிரச்சினை, கட்டாகாலிகால்நடைகள் போன்றவற்றை குறிப்பிடலாம்.

இன்று சமூகம் அதிகம் எதிர் கொள்ளும் சமூக பிரச்சினையாக யானை - மனித மோதல் காணப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் மனிதர்களின் காடு நோக்கிய நகர்வு மற்றும் காடுகள் அழிக்கப்படுதலாகும். அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் மக்கள் குடியிருப்புகள், வீதிகள், தொழிற்சாலைகள், விவசாய நிலங்களை விஸ்தரித்தல் போன்றவற்றுக்காக காடழிப்புகளை மேற்கொள்ளுகின்றனர். இதனால் யானைகள் குடிமனைக்குள் ஊடுருவுகின்ற போக்கு காணப்படுகிறது. மேலும் விவசாய நிலங்களின் விரிவாக்கமும் யானை - மனித மோதலுக்கு மிக முக்கிய காரணமாகும். குறிப்பாக, காட்டுப் பகுதிகளிற்கு அருகாமையில் நெல், கரும்பு, வாழை போன்ற பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவை யானைகளுக்கு எளிதில் கிடைக்கக்கூடிய உணவாக இருப்பதனால் அவற்றின் ஈர்ப்பின்போதும் யானைகள் மக்கள் நடமாடும் பகுதிகளை நோக்கி வருகின்றன.

காலநிலை மாற்றமும் இன்று யானை மனித மோதலுக்கு முக்கிய காரணமாக அமைகிறது. அதாவது குறைந்த மழைவீழ்ச்சி மற்றும் நீண்ட கால வறட்சி நிலவுகின்றன இதனால் குளங்கள், ஆறுகள், நீர்நிலைகள் வறண்டு போவதனால் யானைகள் குடிநீருக்காக கிராமங்களுக்கு செல்வது கட்டாயப்படுத்தப்படுகின்றன. மேலும் மனிதர்களின் ஆக்கிரமிப்புகளான வீதி புனரமைப்பு, ரயில் பாதைகள் போன்றவை யானைகளின் பாரம்பரிய வழித்தடங்களை ஊடறுத்து செல்லுகின்றன. இதனால் யானைகள் தங்கள் இயல்பான குடியேற்ற பாதைகளை பயன்படுத்த முடியாமல் மனித குடியிருப்புகள் புகுந்து விடுகின்றன.

இந்த யானை மனித மோதலினால் மனிதனுக்கும் யானைக்கும் பேரழிவுகள் ஏற்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் பல கிராம மக்கள்



கொல்லப்படுகின்றன இதிலும் இரவு நேரங்களில் வயல்வெளிகளில் பணிபுரியும் விவசாயிகள் அதிகம் பாதிக்கப்படுகின்றன. நெல் வாழை, பயறு, கரும்பு, உழுந்து, போன்ற பயிர்கள் யானை தாக்கத்தால் அழிவடைகின்றன. இதனால் பல மாதங்களாக உழைத்த உழைப்பு வீணடைகின்றது.இதன் காரணமாக விவசாயிகள் கடும் பொருளாதார இழப்புக்களை சந்திக்கின்றன்.

மனிதர்கள் தங்களையும் தமது பயிர்களையும் பாதுகாத்துக் கொள்வதற்காக யானை மின் கம்பிகள், குழிகள், வெடிகுண்டுகள், போன்ற ஆபத்தான முறைகளை பயன்படுத்துகின்றனர். இதனால் யானைகள் பெருமளவில் இறக்கின்றன. இவ்வாறு யானை மனித மோதல் இடம்பெறும் பகுதிகளில் மக்கள் அச்சத்துடன் நடமாடுகின்றன. எடுத்துக்காட்டாக, வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட ஒரு பாடசாலை யானைகள் ஊடறுத்து செல்லும் மத்திய பகுதியாக காணப்படுவதனால் ஆசிரியர்கள் மாணவர்கள் உயிர் ஆபத்துக்கு அஞ்சி அப்பாடசாலை செல்வதை நிறுத்திமையினால் தற்பொழுது பாடசாலை இயங்காத நிலை காணப்படுகிறது. இதனால் மாணவர்களின் கல்வி பாதிப்படைந்து விடுகின்றது.

யானை மனித மோதலை குறைப்பதற்கு பலதரப்பட்ட முயற்சிகள் அவசியமாகும். குறிப்பாக காடுகள் வெட்டுவது தொடர்பாக உள்ள சட்டத்தை அமல்படுத்தல், புதிய காடுகளை உருவாக்குதல், யானைகள் பயணம் செய்யும் இயல்பான பாதைகளில் அடையாளம் கண்டு அவற்றை பாதுகாப்பதோடு, குடியிருப்புக்கள் ரயில் பாதைகளை அமைக்கின்ற போது யானைகள் கடந்து செல்லக்கூடியவாறு சுரங்கங்களை அமைத்தல், கிராம மக்களுக்கு யானைகளின் இயல்புநிலை பற்றி விழிப்புணர்வூட்டல் குறிப்பாக, யானைகள் சினம் கொள்ளும்போது, எவ்வாறு சமாளிப்பது தொடர்பில் பயிற்சி அளித்தல், மேலும், உயிர் பாதிப்புகளுக்கு அரசு உடனடி நிவாரணம் வழங்க வேண்டும் இது மக்களின் மனக்கசப்பை குறைக்கும்

யானை மனிதன் மோதலானது ஒரு நாளில் தீர்க்க கூடிய பிரச்சினை அல்ல மனிதன் தனது தேவைக்காக காட்டை அளிக்காமல் வனவிலங்குகளின் உரிமைகளை மதித்து வாழ்ந்தால் தான் இந்த பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும். யானை நம் நாட்டின் பெருமை அது பசுமையின் காவலன் ஆகையால் யானையை காப்பதே மனிதனையும் காக்க முடியும் என்பதை உணர்ந்து செயல்படுதல் வேண்டும்.

ரஷ்யா

# ஏவுகணை தாக்குதல்; 20 பேர் பலி

உக்ரைன் மீது ரஷ்யா 2022ஆம் ஆண்டு தொடங்கிய போர் 3 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த போரை நிறுத்த அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் இரு நாடுகளின் தலைவர்களையும் தனித்தனியே சந்தித்து பேசினார். ஆனால் பேச்சுவார்த்தையில் தீர்வு எட்டப்படவில்லை.

எனவே உக்ரைன் மீதான தாக்குதலை ரஷ்யா மேலும் தீவிரப்படுத்தியது. அதன் ஒருபகுதியாக உக்ரைனின் டொனெட்ஸ்க் பிராந்தியத்தில் உள்ள யாரோவா கிராமம் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல் நடத்தியது.



இதில் 20க்கும் மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் பலியாகினர்.

இதனை கொடூரமான தாக்குதல் என உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கடுமையாக விமர்சித்தார்.

மேலும் ரஷ்யாவை கட்டுப்படுத்த வலுவான நடவடிக்கை தேவை என அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

காத்மாண்டு

# 1,500 கைதிகள் தப்பியோட்டம்

நேபாளத்தில் நாடு தழுவிய அமைதியின்மைக்கு மத்தியில், நேபாளம் லலித்பூரில் உள்ள நகு சிறையில் இருந்து குறைந்தது 1,500 கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர்.

ராஷ்ட்ரிய சுதந்திரக் கட்சித் தலைவர் ரபி லாமிச்சானே விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த பெருமளவிலான



தப்பிச் சென்றதாக உள்ளூர் ஊடகமான கபர்ஹப் செய்தி வெளியிட்டுள்ளது.

கலவரத்தின் போது, சிறைச்சாலையில் குறைந்தது 1,500 கைதிகள் அடைக்கப்பட்டனர். பொலிஸார் தங்கள் பதவிகளை கைவிட்டு, கைதிகள் தப்பிச் செல்ல அனுமதித்ததாக அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

அதிகாரிகள் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றனர், கைதிகளை பெருமளவில் விடுவிப்பது பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்று எச்சரிக்கின்றனர்.

வொஷிங்டன்

விசா பெற

# இந்தியர்களுக்கு புதிய கட்டுப்பாடு

அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் நிர்வாகத்தின் கடுமையான விசா நடைமுறைகள், வெளிநாட்டவர் மீதான அடக்குமுறை ஆகியவை நாளுக்கு நாள் மோசமடைந்த வண்ணம் உள்ளன.

இந்நிலையில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2025 ஜூன் வரை அமெரிக்கா செல்லும் இந்தியர்களின் எண்ணிக்கை கணிசமாக குறைந்துள்ளது. 2001 க்கு பிறகு கடந்த 24 ஆண்டுகளுக்கு பிறகு இந்த எண்ணிக்கையில் இந்த அளவு சரிவு ஏற்பட்டுள்ளது. அமெரிக்க வர்த்தக துறையின் தேசிய சுற்றுலா நிர்வாகத்தின் (NTTO) தரவுகள் மூலம் இது தெரியவந்துள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவுக்கு செல்ல விசா பெறும் முறைக்கு அந்நாட்டு அரசு விதித்துள்ள புதிய கட்டுப்பாடுகள் காரணமாக, வெளிநாடு வாழ் இந்தியர்கள் விசா பெற பல மாதங்கள் காத்திருக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

உதாரணமாக, ஜெர்மனியில் வசிக்கும் இந்தியர் ஒருவர் விசா பெற வேண்டும் எனில் தங்களது சொந்த நாடான இந்தியாவில் இருந்தே விண்ணப்பிக்க வேண்டும் என அமெரிக்கா கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்பு வெளிநாடு வாழ் இந்தியர்கள் அவர்கள் தங்கியிருக்கும் நாட்டில் இருந்தே விசா பெற்று அமெரிக்கவுக்கு சென்று வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

புதுடெல்லி

ட்ரம்புடன் பேச்சுவார்த்தை நடத்த

# பிரதமர் மோடி ஆவல்



ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்வதால் இந்தியாவுக்கு எதிராக கூடுதல் 25 சதவீத வரியை அமெரிக்கா விதித்துள்ளது. இதன் மூலம் இந்திய பொருட்களுக்கு அமெரிக்காவின் வரி விதிப்பு 50 சதவீதமாக இருந்த சூழலில், பிரதமர் மோடியுடன் விரைவில் பேச இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூறியுள்ளார்.

இது தொடர்பாக தனது சமூக வலைத்தளத்தில் அவர் கூறியிருப்பதாவது, இருநாடுகளுக்கு இடையேயன வார்த்தக விவகாரம் தொடர்பாக இந்தியாவும் அமெரிக்காவும் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. வரும் வாரங்களில் பிரதமர் மோடியுடன் பேசுவதை எதிர்நோக்கியுள்ளேன்” என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்தியா மற்றும் அமெரிக்கா இயற்கையான கூட்டாளிகள் என்று கூறியுள்ள பிரதமர் மோடி, டிரம்ப் உடன் பேச ஆவலாக இருப்பதாகத் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைத்தளத்தில் கூறியிருப்பதாவது,

இந்தியா- அமெரிக்கா நாடுகளுக்கு இடையே நெருங்கிய நட்பு இருக்கிறது. இரு நாடுகளும் இயற்கையான கூட்டாளிகள். இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் இந்திய- அமெரிக்கா கூட்டணியில் எல்லையற்ற திறனை வெளிப்படுத்தும் என நம்புகிறேன்.

இந்தப் பேச்சுவார்த்தைகளை விரைவாக முடிக்க இரு தரப்பும் முயன்று வருகின்றன. நானும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புடன் பேச ஆவலாக இருக்கிறேன்.

இது இரு நாட்டு மக்களுக்கும் சிறந்த மற்றும் வளமான எதிர்காலத்தைத் தரும். இந்த பேச்சுவார்த்தை இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என்று நம்புகிறேன் என்றார்.

புதுடெல்லி

துணை ஜனாதிபதியாக

# ராதாகிருஷ்ணன் நாளை பதவியேற்பு

இந்திய துணை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற சி.பி. ராதாகிருஷ்ணன், பாரதிய ஜனதா கட்சியின் (பா.ஜ.க.) தலைவர்களை சந்தித்து நன்றி தெரிவித்துள்ளார்.

சி.பி.ராதாகிருஷ்ணன் துணை ஜனாதிபதியாக பதவி ஏற்கும் விழா வெள்ளிக்கிழமை(12) நடைபெறும். இதற்கான ஏற்பாடுகளை பாராளுமன்ற அதிகாரிகள் செய்து வருகிறார்கள்.

தற்போது சி.பி. ராதாகிருஷ்ணன் மகாராஷ்டிரா மாநில கவர்னராக பதவி வகித்து வருகிறார். அந்த பதவியை அவர் இராஜினாமா செய்து கடிதம் அனுப்புவார்.

ஜனாதிபதித் தேர்தல், செவ்வாய்க்கிழமை(09) அன்று நடைபெற்றது. இதில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் தமிழகத்தைச் சேர்ந்த சி.பி. ராதாகிருஷ்ணன் போட்டியிட்டார்.

எதிர்க் கட்சிகளின் இந்தியா கூட்டணி சார்பாக பி. சுதர்சன் ரெட்டி போட்டியிட்டார் இதில், சி.பி.ராதாகிருஷ்ணன் 452 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் சேர்த்து மொத்தம் 788 எம்பிக்கள் உள்ளனர்.

இருப்பினும் 7 உறுப்பினர்கள் பதவி வெற்றிடமாக இருப்பதால் 781 பேர், அதாவது மக்களவையில் 542 (1 இடம் வெற்றிடம்), மாநிலங்களவையில் 239 (6 வெற்றிடம்) பேர் மட்டுமே வாக்களிக்க தகுதி பெற்றனர்.

இந்த தேர்தலில் பிஜூ ஜனதா தளம் (7), சந்திரசேகர ராவ்வின் பிஆர்எஸ் (4), அகாலி தளம் (1) மற்றும் சுயேட்சை (1) ஆகிய 13 பேர் வாக்களிக்கவில்லை. மொத்தம் 768 பேர் மட்டுமே வாக்களித்துள்ளனர்.

# பொலிவியாவிடம் தோற்ற பிரேஸில்



தென்னமெரிக்க கால்பந்தாட்டச் சம்மேளனங்களின் கூட்டமைப்பின் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில், பொலிவியாவில் புதன்கிழமை (10) அதிகாலை நடைபெற்ற அந்நாட்டுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் பிரேஸில் தோற்றது.

பொலிவியா சார்பாகப் பெறப்பட்ட கோலை மிகேல் டெர்செரோஸ் பெற்றிருந்தார்.

இதேவேளை ஈக்குவடோரில் நடைபெற்ற அந்நாட்டுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான ஆர்ஜென்டீனா தோற்றது. ஈக்குவடோர் சார்பாகப் பெறப்பட்ட கோலை இன்னர் வலென்சியா பெற்றிருந்தார்.

இந்நிலையில் சிலியில் நடைபெற்ற அந்நாட்டுக்கும், உருகுவேக்குமிடையிலான போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

பந்துவீச்சாளர்களின் தரவரிசையில்

# மூன்றாமிடத்துக்கு முன்னேறிய ஆர்ச்சர்



சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் மூன்றாமிடத்துக்கு இங்கிலாந்தின் ஜொஃப்ரா ஆர்ச்சர் முன்னேறியுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கெதிரான இறுதி இரண்டு போட்டிகளில் 8 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்தே 19ஆம் இடத்திலிருந்து 16 இடங்கள் முன்னேறி ஆர்ச்சர் மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

மேற்படி போட்டிகளில் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இங்கிலாந்தின் அடில் ரஷீட், 15ஆம் இடத்திலிருந்து ஏழு இடங்கள் முன்னேறி எட்டாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்கள்:
1.கேஷவ் மஹராஜ்,
2. மகேஷ் தீக்‌ஷன,
3.ஜொஃப்ரா ஆர்ச்சர்,
4. குல்தீப் யாதவ்,
5.பெர்னார்ட் ஸ்கொல்ட்ஸ்,
6. ரஷீட் கான்,
7.மிற்செல் சான்ட்னெர்,
8. அடில் ரஷீட், 9. மற் ஹென்றி,
10.இரவீந்திர ஜடேஜா.

முதல் 10 துடுப்பாட்டவீரர்கள்:
1.ஷுப்மன் கில்,
2.றோஹித் ஷர்மா,
3.பாபர் அஸாம்,
4.விராட் கோலி,
5.டரைல் மிற்செல்,
6.சரித் அசலங்க,
7.ஹரி டெக்டர்,
8.ஷ்ரேயாஸ் ஐயர்,
9.ஷாய் ஹோப்,
10.இப்ராஹிம் ஸட்ரான்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்கள்:
1.சிகண்டர் ராசா,
2.அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய்,
3.மொஹமட் நபி,
4.மெஹிடி ஹஸன் மிராஸ்,
5.மிஷெல் பிறேஸ்வெல்.

இந்நிலையில், இலங்கைக்கெதிரான மூன்று போட்டிகளில் 58 ஓட்டங்களைப் பெற்றதுடன், 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய சிம்பாப்வேயின் சிகண்டர் ராசா, இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கான சகலதுறைவீரர்களுக்கான பட்டியலில் ஏழாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி நான்காமிடத்தையடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்கள்:
1.ஹர்திக் பாண்டியா,
2.மொஹமட் நபி,
3.டிபேந்திர சிங் ஐரீ,
4.சிகண்டர் ராசா,
5.றொஸ்டன் சேஸ்

சிம்பாப்வேக்கெதிரான இறுதிப் போட்டியில் 46 ஓட்டங்களைப் பெற்ற இலங்கையின் குசல் பெரேரா, துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் 12ஆம் இடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி ஒன்பதாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்கள்:
1.அபிஷேக் ஷர்மா,
2.திலக் வர்மா,
3.பில் ஸோல்ட்,
4.ஜொஸ் பட்லர்,
5.ட்ரெவிஸ் ஹெட்,
6.சூரியகுமார் யாதவ்,
7.பதும் நிஸங்க,
8.டிம் செய்ஃபேர்ட்,
9.குசல் பெரேரா,
10.டிம் டேவிட்.

முதல் 10 பந்துவீச்சாளர்கள்
1.ஜேக்கப் டஃபி, 2.அடில் ரஷீட், 3. அகீல் ஹொஸைன், 4. வருண் சக்கரவர்த்தி, 5. அடம் ஸாம்பா, 6. ரவி பிஷ்னோய், 7.வனிது ஹசரங்க, 8. நாதன் எலிஸ், 9. ரஷீட் கான், 10.அர்ஷ்டீப் சிங்.



ஆசியக் கிண்ணம்:

# ஹொங் கொங்கை வீழ்த்திய ஆப்கானிஸ்தான்

ஆசியக் கிண்ணத் தொடரின் ஐக்கிய அரபு அமீரகத்தின் அபு தாபியில் செவ்வாய்க்கிழமை (09) நடைபெற்ற ஆரம்ப குழு பி போட்டியில் ஹொங் கொங்கை ஆப்கானிஸ்தான் வீழ்த்தியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான்: 188/6 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: செடிகுல்லாஹ் அடல் ஆ.இ 73 (52), அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் 53 (21), மொஹமட் நபி 33 (26) ஓட்டங்கள். பந்துவீச்சு: கின்ஷிட் ஷா 2/24 [3], எஹஸன் கான் 1/28 [4])

ஹொங் கொங்: 94/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: பாபர் ஹயாட் 39 (43) ஓட்டங்கள். பந்துவீச்சு: குல்படின் நைப் 2/8 [3], பஸல்ஹக் பரூக்கி 2/16 [3], அஸ்மதுலாஹ் ஓமஎஸாய் 1/4 [2], நூர் அஹ்மட் 1/16 [4], ரஷீட் கான் 1/24 [4], ஏ.எம். கஸன்ஃபார் 0/4 [2])

போட்டியின் நாயகன்: அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய்

இந்நிலையில் இன்றிரவு 8 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பங்களாதேஷை ஹொங் கொங் எதிர்கொள்கிறது.

# ஹங்கேரியை வென்ற போர்த்துக்கல்

உலகக் கிண்ணத் தொடருக்கான ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றிய தகுதிகாண் போட்டிகளில், ஹங்கேரியில் புதன்கிழமை (10) அதிகாலை நடைபெற்ற அந்நாட்டுடனான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல் வென்றது.

போர்த்துக்கல் சார்பாக பெர்ணார்டோ சில்வா, கிறிஸ்டியானோ றொனால்டோ, ஜோவா கான்செலோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். ஹங்கேரி சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் பார்னபஸ் வர்கா பெற்றிருந்தார்.

இதேவேளை தம்நாட்டில் நடைபெற்ற ஐஸ்லாந்துடனான போட்டியை 2-1 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் வென்றது. பிரான்ஸ் சார்பாக கிலியான் மப்பே, பிராட்லே பார்கொலா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும், ஐஸ்லாந்து சார்பாகப் பெறப்பட்ட கோலை அன்ட்றி குவஜோன்சன் பெற்றார்.

இந்நிலையில், சேர்பியாவில் நடைபெற்ற அந்நாட்டுடனான போட்டியை 5-0 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து வென்றது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 11, செப்டெம்பர் 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.